**தலைப்பு 269 - மட்டக்களப்பு மாவட்டச் செயலகம்**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2020 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் மாவட்டச் செயலகத்தின் வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை உரிய வகையில் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டுச்சேரல், தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 1.6.2 (உ) | மீளாய்வாண்டில் மாவட்டச் செயலக விற்பனைகள் மூலம் பெறப்பட்ட ரூபா 103,100 தொகையானது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான உட்பாய்ச்சலாக கீழ் வெளிக்காட்டுவதற்கு பதிலாக தொழிற்பாட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட தொகையாக காட்டப்பட்டிருந்தது. | விற்பனை மூலம் பெறப்பட்ட காசு உட்பாய்ச்சல் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டதாக காசுப்பாய்ச்சலின் கீழ் வெளிக்காட்டப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 3.3 (அ) | சுனாமியால் பாதிக்கப்பட்டோரை மீளக் குடியமர்த்துவதற்காக காணிகளை கையேற்று அக்காணிகளுக்கு இழப்பீடு செலுத்தும் நடவடிக்கைகள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதன் பின்னர், மூன்று நபர்களால் போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு ரூபா 6.3 மில்லியன் இழப்பீடு பெறப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த பிரதேச செயலகத்திலுள்ள பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் குறித்த ஆவணங்களின் சரியான தன்மை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்காது இந்த இழப்பீட்டினை செலுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் கவனயீனமாக செயற்பட்டதற்காகவும், கடமையினை அலட்சியம் செய்தமைக்காகவும், அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்தியமைக்காகவும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 106 மற்றும் 113 இன் பிரகாரம், 26 அலுவலக வாகனங்களுக்கு ஏற்பட்ட 32 விபத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றின் நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றில் கூட்டுமொத்த இழப்பீட்டு பெறுமதியாக ரூபா7,574,260 காட்டப்பட்டிருந்தது. இவ் இழப்பீட்டிற்கு எதிராக காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 6,730,186 தொகை இழப்பீட்டிற்கு எதிராக சீர் செய்யப்பட்டு உண்மையான இழப்பீட்டு பெறுமதி கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 106 மற்றும் 113 இன் பிரகாரம், இழப்பீட்டிற்கு எதிராக காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தொகை சீர் செய்யப்பட்டு உண்மைப் பெறுமதிகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். | வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றின் நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றில் இழப்பீட்டு பெறுமதியில் இழப்பீட்டிற்கு எதிராக காப்புறுதி நிறுவனம் மற்றும் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந து பெறப்பட்ட தொகையானது முறையான பதிவழிப்புகள் இடம்பெறும் போது உரிய இழப்பீடுகளுக்கான தொகை சீர்செய்யப்படும். |

## 1.6.2 நிதி நிலைமை கூற்று

-----------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | கட்டிடங்களும் கட்டமைப்பிற்கான ஆரம்ப மீதி ரூபா 1,148,016,532 தொகை நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 1,180,780,385 தொகையாகக் காட்டப்பட்டமையினால் மீளாய்வாண்டிற்கான மொத்த சொத்தானது ரூபா 32,763,853 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | நடைமுறையில்லாச் சொத்துக்களின் உண்மைப் பெறுமதிகள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் சரியாகக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும். | குறித்த நடவடிக்கையை சீராக்குவதற்கு எம்மால் திறைசேரிக்கு அறியத்தரப்பட்டு திறைசேரியினால் சீராக்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ii) | இயந்திர மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மீதி ரூபா 405,147,500 நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 403,156,986 தொகையாக காட்டப்பட்டமையினால் மீளாய்வாண்டிற்கான நடைமுறையல்லா மொத்த சொத்தானது ரூபா 1,990,514 தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நடைமுறையில்லாச் சொத்துக்களின் உண்மைப் பெறுமதிகள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் சரியாகக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும். | தற்போது Web Interface மூலம் சீராக்கப்பட்டுள்ளது. |
| (iii) | வேலை முடிவுறாத புதிய மாவட்ட செயலகக் கட்டிடம் மற்றும் மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலகக் கட்டிட நிர்மாண வேலைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்பட்ட கூட்டு மொத்தத் தொகையான ரூபா 477,697,552 நிதிக் கூற்றுக்களில் கட்டிடங்களும் | வேலை முடிவுறாத கட்டடங்களுக்கு செலுத்தப்பட்ட தொகை நிதிக் கூற்றுக்களில் நடைமுறை வேலையாக வெளிப்படுத்தல் வேண்டும். | குறித்த கணக்கிடல் செயற்பாடானது Cigas கணக்கு பொதியின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளமை யினால் உரிய கணக்கு மாற்றம் தொடர்பாக பொருத்தமான ஒரு படிமுறையினை பின்பற்றி எதிர்காலத்தில் உரிய சீராக்கலினை |

| | | | |
|---|---|---|---|
| | கட்டமைப்பிற்கான கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | மீளாய்வாண்டில் அலுவலக வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக ஏற்பட்ட இழப்பின் உண்மைப் பெறுமதி ரூபா 1,460,348 தொகையினை நிதிக்கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | அலுவலக வாகனத்திற்கு ஏற்பட்ட உண்மைப் பெறுமதிகள் நிதிக் கூற்றில் நட்டங்கள் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றில் வெளிக்காட்டப்படுதல் வேண்டும். | பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினது திருத்தம் தொடர்பான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு எதிர்வரும் 2020 ஆம் ஆண்டிற்கு தயாரிக்கப்படும் நிதிக் கூற்றில் சேர்த்துக் கொள்ளப்படும். |
| (v) | 06 பிரதேச செயலாளர்களின் விடுதிகளின் மதிப்பீட்டு பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு உரிய பெறுமதிகள் காட்டப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலாளர்களின் விடுதிகளின் மதிப்பீட்டுப் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருத்தல் வேண்டும். | மேற்குறிப்பிடப்பட்ட அமைச்சினால் இதுவரையில் மதிப்பீடு செய்து வழங்கப்படாமையினால் இவற்றின் பெறுமதிகள் நிதிக்கூற்றில் வெளிக்காட்டப்படவில்லை. |

### 1.6.3 மூலதனச் செலவீனம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம், மீளாய்வாண்டில் திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுமொத்த தொகை ரூபா 6,417,718 நிதிக் கூற்றுக்களில் மூலதன செலவின சுருக்கத்தில் ரூபா 6,500,238 தொகையாக காட்டப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம், திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட தொகையினையே நிதிக்கூற்றுக்களின் மூலதனச் செலவின சுருக்கத்தில் காட்டப்படல் வேண்டும். | இரு செயற்திட்டங்களுக்கிடையே மாற்றம் செய்யும் போது தலைப்பு 269-1-2-0-149 இன் கீழ் வகைமாற்றம் செய்யப்பட்ட ரூபா 82,479.00 இரு முறை தவறுதலாக கூட்டப்பட்டதன் காரணமாக அத்தொகை ரூபா 6,500,238.00 தொகையாக காட்டப்பட்டிருந்தது. |

**1.6.4 திறைசேரி புத்தகங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | திறைசேரி அச்சுப்பிரதியின், பொறுப்புக்கான ஒதுக்கச் சுருக்கத்தின் 9165-0-0-269-0-0-0 விடயத்தின் கீழ் காட்டப்பட்ட ரூபா 2,170,063,633 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி அச்சுப் பிரதியின், பொறுப்புக்கான ஒதுக்கச் சுருக்கத்தில் காட்டப்பட்ட தொகைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | Cigas ஊடான கணக்கு பொழிப்பு நடவடிக்கையின் போது நடைமுறையல்லாச் சொத்துக்களை கணக்கிடுவதாகும். அத்துடன் Cigas web Interface ஊடாக வழங்கப்படுவதனால் குறித்த தலைப்புகளில் எம்மால் எவ்விதமான திருத்தத்தினையும் மேற்கொள்ள முடியாதுள்ளது. |
| (ii) | திறைசேரி அச்சுப்பிரதியின் பிரகாரம், பொறுப்புக்கள் இல்லாதிருந்தும் நிதிக்கூற்றின் பொறுப்புக்கள் பற்றிய கூற்றில் (குறிப்பு (IV)) ரூபா 671,382 தொகை பொறுப்பாக காட்டப்பட்டிருந்தது. | திறைசேரியின் அச்சுப்பிரதியில் காட்டப்பட்ட தொகையே நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுதல் வேண்டும். அவ்வாறு காட்டப்படாதுவிடின் வேறுபாட்டிற்கான விளக்கத்துடன் நிதிக்கூற்றுக்களில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். | நிதி கூற்றில் பொறுப்புகள் பற்றிய கூற்றில் (குறிப்பு IV) காட்டப்பட்டுள்ள தொகை குறித்த பிரதேச செயலகங்களில் குறித்த செலவுத்தலைப்புகளில் ஒதுக்கீடுகள் முடிவடைந்தமையினாலும், பற்றாக்குறையின் காரணமாகவும் பொறுப்புகளாக காட்டப்பட்டவையாகும். |

**1.6.5 காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான காசில் ஏற்பட்ட தேறிய அசைவானது பூச்சியத் தொகையாக காணப்பட்ட போதிலும், | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் நிதிக் கூற்றுக்களில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலப் | பூச்சியத் தொகையாக முதன்மை தமிழ் பிரதிக்கான பிரதி பண்ணல், புத்தக கோர்ப்பு நடவடிக்கையில் |

| | | |
|---|---|---|
| காசுப்பாய்ச்சல் கூற்றில் தேறிய காசு அசைவாக ரூபா 58,417,194 தொகை மறைப் பெறுமதியாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றின் தமிழ் பிரதியில் காட்டப்பட்டிருந்தது. | பிரதிகளிலுள்ள அனைத்துத் தொகைகளும் ஒன்றுக் கொன்று முரண்படாது காட்டப்படுதல் வேண்டும். | எற்பட்ட கவனக்குறைவு காரணமாக இத்தவாறு எற்பட்டுள்ளது. |

**1.6.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2020 ஆகஸ்ட் 12 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன், அந்த ஐயவினாக்களுக்குரிய மதிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியானது ரூபா 11,612,500 ஆகும். | தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் விடப்படும் கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் காலக்கிரமத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வு வினாக்களுக்கான பதில்களை விரைவாக அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| திட்டமிடப்பட்டவாறு உரிய காலப்பகுதியில் குறித்த பணிகளை நிறைவேற்றாது, அந்த பணிகளை ஆண்டின் இறுதியில் மேற்கொள்ள முனைவதால் தேவையான கட்டுநிதிகள் திறைசேரியினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ரூபா 610,821,573 கூட்டு மொத்தப் பெறுமதியான | திட்டமிடப்பட்டவாறு கட்டுநிதியினைப் பெற்று அப்பணிகளை குறிப்பிட்ட காலத்தினுள் நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வருடத்தின் நான்காம் காலாண்டில் அபிவிருத்தி பணிகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறுவதினால் மாவட்டத்தின் அபிவிருத்தி கருதி குறித்த பணிகளை ஆண்டின் இறுதியில் செயற்படுத்தவேண்டிய தேவை எற்படுவதினால் |

| | | |
|---|---|---|
| 496 பணிகள் நிறைவேற்ற முடியாது போயிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தன. | | குறித்த பணிகளுக்கான கட்டுநிதியினை பெறமுடியாது போனது. |

**2.2 வருமான முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஏனைய பெறுகைகளுக்காகன வருமான மதிப்பீடு ரூபா 30,646,200 தொகையாகக் காணப்பட்ட போதிலும் உள்ளபடியாக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 258,244,484 தொகையாக இருந்தமையினால் வருமான மதிப்பீடு நடைமுறைக்குச் சாத்தியமற்ற முறையில் தயாரிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாண ஏற்பாடுகளுக்கு அமைய வருமான மதிப்பீடு நடைமுறைக்குச் சாத்தியமான முறையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். | வருமான அறவீடுகள் தொடர்பாக உரிய திணைக்களங்களினால் மதிப்பீடுகள் கோரப்படாமையினால் அவை தொடர்பாக எம்மால் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாக மதிப்பீட்டுக்கு மேலதிகமாக வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. |

**2.3 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி அமைச்சின் 2019 ஜுன் 17 ஆந் திகதிய 04/2019 இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரிவு 02(II) இன் பிரகாரம், மின்சார பட்டியலில் 5 சதவீதத்தினை சேமிப்பதற்கு கவனம் செலுத்துமாறு பணிக்கப்பட்டிருந்தும் இவ் அறிவுறுத்தலுக்கு முரணாக வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் 1 சதவீதத்திற்கும் குறைந்த தொகையினையே சேமிக்கப்பட்டிருந்தது. | நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் மின்சாரப் பட்டியலில் 5 சதவீதத்தினை சேமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | பிரதேச செயலகங்களின் பாவனைக்கென புதிய கட்டிடத் தொகுதிகள் அமைக்கப்பட்டு அவற்றின் பாவனை காரணமாகவும், அரசினால் வழங்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்களின் புதிய நியமனம் காரணமாகவும் மின்பாவனையில் அதிகரிப்பு எற்பட்டிருந்தது. |

## 2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக இலகுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்திடமிருந்து காணி சுவீகரிப்பு மற்றும் கழிவு நீர் அகற்றல் செயற்றிட்டத்திற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட ரூபா 450,000 தொகையினை உரிய காலத்தில் பயன்படுத்தாது 02 வருடங்களுக்கு மேலாக அச் செயற்றிட்டத்தினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வைப்புக் கணக்கில் தொடர்ச்சியாகக் வைக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட செயற்றிட்டத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட தொகையினை உரியகாலத்தில் பயன்படுத்துவதற்கு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிதி பிரமாணம் 570 பிரகாரம், காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்காக வைப்பு செய்யப்படும் தொகையானது வைப்பு திகதியில் இருந்து 10 ஆண்டுகளுக்கு வைப்பு கணக்கில் பேணப்படலாம் என்பதற்கமைவாக குறித்த திட்டம் முடிவுறுத்தப்படும் வரையில் வைப்பு கணக்கில் பேணப்பட்டு வருகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு மற்றும் செயலாற்றல்

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | ஏறாவூர்பற்று பிரதேசத்தில் பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படும் சிறுவர் பூங்காக்களினை மேம்படுத்தும் நோக்கில் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சினால் 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 6,700,000 நிதியேற்பாட்டினை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தாது திட்ட முன்மொழிவிற்கு முரணாக காணி மீள் நிரப்புதல் அபிவிருத்தி நிறுவனத்தின் அனுமதியின்றி நீர் தேங்கி நிற்கும் குமாரவேலியார் கிராமத்தில் புதிய சிறுவர் பூங்கா ஒன்று நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. | ஏறாவூர்பற்று பிரதேசத்தில் சிறுவர் பூங்காக்களினை மேம்படுத்தும் நோக்கில் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டினை அந்நோக்கிற்கு மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டும். | ஏறாவூர்பற்று சிறுவர் பூங்கா தொடர்பான ஐயவினா பற்றிய தகவல்கள் திரட்டப்படுகின்றது. விரைவில் இவ் ஐயவினாவிற்கான பதில்கள் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். |
| (ii) | மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மக்களின் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 500,000 தொகையினை நோக்கத்திற்கு முரணாக அலுவலகத் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட நோக்கத்திற்காக வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளை அந் நோக்கத்திற்கு மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டும். | குறிப்பிட்ட நோக்கத்திற்காக வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் சேமிப்புத் தொகையினையே புதிய கட்டிடத் தொகுதியின் பயன்பாட்டிற்காக தளபாடம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. |

### 3.1.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் வாகரைப் பிரதேசத்தில் நஞ்சற்ற விவசாய உற்பத்திகளை அதிகரித்து அதனூடாக மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் போசாக்கு மட்டத்தினை அதிகரிக்கும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்ட 54 விவசாயக் கிணறுகளில் ரூபா 2,072,950 பெறுமதியான 15 கிணறுகள் ஒரு வருடத்திற்கு மேலாக பயிற்செய்கை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாமல் பாழடைந்து கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டிருந்தன. | குறிப்பிட்ட விவசாயக் கிணறுகளின், நிர்மாணிக்கப்பட்ட நோக்கத்தின் இலக்கினை அடையக் கூடிய வகையில் அவற்றை செயற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | தற்போது 15 கிணறுகளில் 10 கிணறுகள் முழுமையாகவும் ஏனைய 5 கிணறுகள் பகுதியளவிலும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | மேலும், அவ் அமைச்சினால் யுத்தத்தினால் வாழ்வாதாரத்தை இழந்த மக்களின் வருமான மட்டத்தினை உயர்த்தும் நோக்கில் ஆடு மற்றும் கோழி வளர்ப்பிற்காக மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்திற்கு 2018 ஆம் ஆண்டில் ரூபா 2,969,635 நிதியேற்பாடாக வழங்கப்பட்டிருந்தும் இச் செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினை அடையக் கூடிய வகையில் முறையான சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத்தாமையினால் இச் செயற்றிட்டம் குறுகிய காலத்தினுள் விளைவற்றுக் காணப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களின் உரிய இலக்கினை அடையக்கூடிய வகையில் அவற்றை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் இத் தவறுகள் ஏற்படாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இலக்கினை அடையக்கூடிய வகையில் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமத் என்பதையும் அறியத்தருகின்றேன். |

**3.1.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக் கொள்ளப்படாமை**

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட காவத்தமுனையில் அமைந்துள்ள கைவிடப்பட்ட கிணற்றின் மூலம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத் திட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கும் செயற்றிட்டத்திற்காக கிராமிய உட்கட்டமைப்பு விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமும் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும், நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினாலும் ரூபா 2,954,000 தொகை செலவிடப்பட்டிருந்தன. இருப்பினும், தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினால் வழங்கப்பட்ட தர அறிக்கையின் பிரகாரம் இக் கிணற்று நீரில் அதிகளவான அமோனியா காணப்படுவதுடன் இவ் நீரைப் பயன்படுத்தும் மக்களுக்கு கடுமையான வயிற்றுப் போக்கு, மஞ்சட்காமாலை, இரைப்பை குடல் நோய்கள், மற்றும் சிறுநீரக நோய்கள் போன்றவைகள் அதிகம் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் காணப்படுவதனால் இச் செயற்றிட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தன. | இச் செயற்றிட்டத்தினை அமுல்படுத்த முன் முறையான சாத்தியவள ஆய்வுகள் மற்றும் கிணற்று நீரின் தர அறிக்கையை பெற்று அதனை நடைமுறைப்படுத்த வேண்டியதுடன் குடியேற்றப்பட்ட மக்களுக்கு குடிநீரை உரிய முறையில் மக்கள் நலன் பெறக் கூடிய முறையில் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | மக்களைப் பாதிக்கக் கூடிய திட்டங்களை பொருத்தமான தொழினுட்ப வல்லுனர்களின் ஆலோசனையைப் பெற்று செயற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படல் வேண்டுமென பிரதேச செயலாளருக்கு அறிவுருத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது. எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படாத வகையில் திட்டங்களைச் செயற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

## 3.1.4 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயல் முன்னேற்றம் அடையப்படாத செயற்றிட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஓட்டமாவடிப் பிரதேசத்தில் இரு சிறிய ஆடைத் தொழிற்சாலை நிறுவுவதற்காக 2016 ஆம் ஆண்டில் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினாலும் மற்றும் 2017 ஆம் ஆண்டில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினாலும் ரூபா 4,912,500 தொகை செலவிடப்பட்டிருந்தும் நிர்மாணிக்கப்பட்ட இவ் இரு ஆடைத் தொழிற்சாலைகளும் 02 வருடங்களிற்கு மேலாக உரிய நோக்கங்களிற்குப் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டிருந்தன. | இவ் ஆடைத் தொழிற்சாலைகள் இரண்டினையும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | ஓட்டமாவடிப் பிரதேச இரு ஆடைத் தொழிற்சாலை நிறுவுதல் தொடர்பான ஐயவினா பற்றிய தகவல்கள் திரட்டப்படுகின்றது. விரைவில் இவ் ஐயவினாவிற்கான பதில்கள் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| | -------------------------------- | ------------------ | -------------------------- |
| (i) | அலுவலகத்தின் பௌதீக வளங்களைப் பாதுகாத்தல், அலுவலக செயற்பாடுகளை நாளாந்தம் கண்காணித்தல், ஆதாரங்களை சேகரித்தல் மற்றும் காணொளிப் பதிவுகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு காத்தான்குடி பிரதேச செயலகத்தில் ரூபா 280,058 செலவில் பொருத்தப்பட்ட பாதுகாப்பு கமராக்களை 03 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அலுவலகத்தின் பௌதீக வளங்களைப் பாதுகாத்தல், அலுவலக செயற்பாடுகளை நாளாந்தம் கண்காணித்தல், ஆதாரங்களை சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்துவதற்கு பொருத்தப்பட்ட கமராக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அலுவலகத்தின் பாதுகாப்புக் கமராக்களின் காணொளிப் பதிவுகள், அலுவலகர்களின் உள்வருகை மற்றும் வெளிச் செல்கையை உறுதிப்படுத்தும் ஆவணமாக இதுவரை பயன்படுத்தப்படவில்லை. |
| (ii) | கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலக பிரிவில் 2018 ஆம் ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்கியமை தொடர்பில் ரூபா 161,600 தொகை கையாடல் செய்யப்பட்டிருந்தமை தொடர்பாக இவ்விடயத்துடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையாடல் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக உரிய காலத்தினுள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மேற்படி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் அடிப்படையில் குற்றப்பத்திரம் தயார் செய்யப்பட்டு நடவடிக்கைக்காக பொருத்தமான அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

----------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| | ------------------------------- | ------------- | ------------------------ |
| (i) | வெற்றிடமாக காணப்படும் 81 கிராம உத்தியோகத்தர் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படாமையினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நிர்வாக நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்படுகின்றன. | வெற்றிடமாக காணப்படும் 81 கிராம உத்தியோகத்தர் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு வெற்றிடங்கள் பற்றிய விபரம் வாராந்தம் வெள்ளிக் கிழமைகளில் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றது. |
| (ii) | கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தில் வெற்றிடமாகக் காணப்படும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பதவிக்கு மாவட்டச் செயலகத்தில் மேலதிகமாகக் காணப்படும் உதவித் திட்டமிடல் பணிப்பாளரினை இடமாற்றுவதற்கு மாவட்டச் செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் அப் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்படுகின்றது. | மேலதிகமாக மாவட்டச் செயலகத்தில் காணப்படும் திட்டமிடல் பணிப்பாளரினை வெற்றிடமாகக் காணப்படும் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | மேலதிகமாகக் காணப்படும் திட்டமிடல் உத்தியோகத்தர்களை வெற்றிடமுள்ள பிரதேச செயலகங்களில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |